# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்
# ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 49 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள, 1,50,000-க்கும் மேற்பட்ட BLA-2, BLC, BDA, BYO சந்திப்பு மாபெரும் மாநாடு, வருகிற 11.2.2026 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில், நம்முடைய மாவட்டம் திருவிடந்தையில் உள்ள, கலைஞர் திடலில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு முதல்வர் - மக்கள் மனம் கவர்ந்த மாபெரும் தலைவர் தளபதி அவர்கள், இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இம்மாபெரும் மாநாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள BLA-2, BLC, BDA, BYO ஆகிய அனைவரையும் அணிதிரண்டு பங்கேற்கச் செய்வதற்காக,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில், கீழ்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | ஒன்றிய – நகர –பகுதி – பேரூர் |
|---|---|---|
| 2.2.2026 திங்கள் | பிற்பகல் 2.00 மணி | திருப்போரூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் & பேரூர் |
| | மாலை 4.00 மணி | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் & பேரூர்–மாமல்லபுரம் நகரம் |
| 3.2.2026 செவ்வாய் | காலை 8.00 மணி | செங்கல்பட்டு நகரம் |
| | காலை 10.00 மணி | காட்டாங்கொளத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம் |
| | பகல் 12.00 மணி | மறைமலைநகர் வடக்கு – தெற்கு நகரம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம் |
| | மாலை 3.00 மணி | காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம் |
| | மாலை 5.00 மணி | குன்றத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம் |
| 4.2.2026 புதன் | காலை 8.00 மணி | திருப்பெரும்புதூர் வடக்கு – தெற்கு ஒன்றியம் & நகரம் |
| | காலை 10.00 மணி | மாங்காடு நகரம் |
| | பகல் 12.00 மணி | குன்றத்தூர் நகரம் |
| | பிற்பகல் 2.00 மணி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் |
| | மாலை 4.00 மணி | ஆலந்தூர் வடக்கு – தெற்கு பகுதி & கண்டோன்மெண்ட் நகரம் |
| | மாலை 6.00 மணி | புனிததோமையார்மலை வடக்கு ஒன்றியம் |
| 5.2.2026 வியாழன் | பிற்பகல் 2.00 மணி | பம்மல் வடக்கு – தெற்கு பகுதி |
| | மாலை 4.00 மணி | பல்லாவரம் வடக்கு – தெற்கு பகுதி |
| | மாலை 6.00 மணி | செம்பாக்கம் வடக்கு பகுதி |
| 6.2.2026 வெள்ளி | பிற்பகல் 2.00 மணி | செம்பாக்கம் தெற்கு & தாம்பரம் கிழக்கு பகுதி |
| | மாலை 4.00 மணி | தாம்பரம் மேற்கு பகுதி & பெருங்களத்தூர் வடக்கு பகுதி |
| | மாலை 6.00 மணி | பெருங்களத்தூர் தெற்கு பகுதி |


எனவே, அந்தந்த மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வார்டு - கிளைக் கழக செயலாளர்கள், BLA-2, BLC, BDA, BYO மற்றும் அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்திடும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

# அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!
# விழுப்புரம் மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர்கள் செஞ்சி மஸ்தான் – டாக்டர் லட்சுமணன் – டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அறிவிப்பு!





விழுப்புரம், ஜன.28-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம். எல்.ஏ, விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட திமுகஅவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் மண்டல பொறுப்பாளர், உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் எம்.எல். ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணிஆகியோர் முன்னிலையில் நாளை (29.01.2026 வியாழக்கிழமை) காலை 11.00 அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள்,பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி,நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

பொருள்:

1. 02.02.2026 அன்று விழுப்புரம் மண்டலத்திற்கு வருகை தரவுள்ள "தேர்தல் அறிக்கை குழுவினர்" கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பாக.
2. 04.02.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைதரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக.
3. 11.02.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் மண்டல வாக்குச்சாவடி நிர்வாகிகள்மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக.
4. கழக ஆக்கப் பணிகள்.

| கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ | டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ | டாக்டர் பொன். கௌதம சிகாமணி |
|---|---|---|
| பொறுப்பாளர், | பொறுப்பாளர், | பொறுப்பாளர், |
| விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. | விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. | விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. |

---

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

# 119வது வட்டம் - வழக்கறிஞர் எம். ராஜேஷ் - எஸ். தீப்தி மணவிழா வரவேற்பு!

### நே. சிற்றரசு – தயாநிதிமாறன் எம்.பி, – என். ஆர்.இளங்கோ எம்.பி, – அன்பகம் கலை – டி.கே.எஸ். இளங்கோவன் பங்கேற்பு! க.வே. மோகன் – ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமை!

சென்னை, ஜன.28-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக் கேணி பகுதிக் கழகம், 119வது வட்டம், எஸ். ராஜா–ஆர்.ராதா ஆகியோ ரது இல்ல மணவிழாவான பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.ராஜேஷ் - எஸ். தீப்தி ஆகியோரது மணவிழா வரவேற்பு இன்று (28.1.2026-புதன் கிழமை) மாலை 6.30 மணி யளவில் லாயிட்ஸ் ரோடு நல்வாழ்வு திருமண மண்ட பத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற் பில் துணை முதல்வர் உதய நிதிஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

வட்டச் செயலாளர் க. வே. மோகன், பகுதிச் செய லாளர் ஏ.ஆர்.பி. எம். காம ராஜ் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

வே.கமலா செழியன், ஆர்.என்.துரை, வழக்கறி ஞர் வே. தேவேந்திரன், வி.என். ராஜன், ரவி ராஜ் குமார், கே. திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணிமாறன் (எ) பாலாஜி, இ.மாரி, எஸ். ரவீந்திரன், ஆர். ரஞ்சித் குமார், எல். பாலு, ஜி. சேகர் ஆகியோர் வரவேற் கின்றனர்.

இம்மணவிழா வரவேற் பில் மாவட்டச் செயலா ளர் நே. சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., என். ஆர். இளங்கோ, அன்பகம் கலை, டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அணிக ளின் நிர்வாகி கள் பங் கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 342 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜன.28-

முதலமைச்சர் அவர்க ளின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார் பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை யிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்க ளுக்கு காலை உணவு வழங் கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 342 ஆம் நாளான - கழகத்தலை வர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.01.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: 56வது வட் டம் பிடாரியார் கோயில் தெரு சைவ முத்தையா தெரு சந்திப்பு, 2) துறைமு கம் மேற்கு பகுதி: வட்டம்



59, ரட்டன் பஜார், சென்னை3. ஆகிய பகுதிக ளில் இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்க ளையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைக ளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக் களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசுட்..ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகு மார், என்.பி.எம்.ஷேக்அப் துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜ யகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலா ளர்கள்: எல்.சத்தியநாராய ணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிர வன் (எ) ராஜா, எம்.பரத்கு மார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங் கர், பா.கதிரவன், ஆர்.இர விச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிர பாகரன், லண்டன் க. முரு கன். ஒருங்கிணைப்பாளர் கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜய குமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிர தீப்குமார் மற்றும் கழக நிர் வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.பி.பி.பிரவீன் குமார் மண விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. – வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர், ஜன.28-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞ ரணி துணை அமைப்பாளர் ஜி.பி.பி.பிரவீன் குமார் - ஆர்.பார்வதி ஆகியோர் திருமண விழா இன்று (28.01.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள குறிஞ்சி இல்லத்தில் நடைபெறுகி றது.

இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அப்துல்மாலிக் பிரபு கஜேந் திரன், ஜி.பி. ராஜா ஆகி யோர் முன்னிலை வகிக்கி றார்கள்.

ஒன்றிய கழகச் செயலா ளர் ரமேஷ் வரவேற்புரை ஆற்றுகிறார் இத் திருமண விழாவில் கழக இளைஞ



ரணி செயலாளரும் தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் தமது திருகரங்களால் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் தமிழ்நாடு சிறு பான்மையினர் நலன் மற் றும் வெளிநாடு வாழும் தமி ழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்து ரையாற்றுகிறார்.

இதில் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் மாநில இளை ஞரணி துணைச் செயலா ளர் எஸ்.ஜோயல் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகி கள் கே.திராவிடபக்தன் ஆர்.டி.இ. ஆதிசேஷன், மாஸ்டர் சேகர், இ.குரு தாஸ் ஓ.ஏ.நாகலிங்கம், மாவட்ட நிர்வாகிகள் டாக் டர் வி.சி.ஆர்.குமரன், சி. ஜெயபாரதி, உதய மலர் பாண்டியன், மிதுன் சக்கர வர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், வி.கிஷோர் , மு.சுப்பிரமணியன்ராஜேஸ் வரி ரவீந்திரநாத் ஒன்றிய நகர பேரூர் கழக செயலா ளர் கே.ஹரி கிருஷ்ணன், பிரகாஷ் ஞான ஒளி, எஸ். மகாலிங்கம், கூளூர் எம். ராஜேந்திரன், சிசு.ரவிச்சந் திரன், சி.ஜே.சீனிவாசன், பெ.பழனி, என்.கே.கிருஷ் ணன், பி.டி. சந்திரன், சே. ராஜேந்திரன், மா. ரகு, பா.சம்பத், ஏ.எல். விஜயகு மார், வி.வினோத்குமார், டி.ஆர்.கே.பாபு, சி.ஜே. செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ம.புவ னேஷ்குமார், டி.எம்.சுகு மார், டி.கே.பாபு, ஆர்.திலீ பன், ஆர்.ராஜா

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் உசரத் பாபு ஒன்றிய கழக நிர்வாகிகள் கோபால், ரவி, மாணிக்கம், தீதா முனுசாமி, தேவா, கோதண்டன், ஏகாம்பரம், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மதன்ராஜ், எம்.ஆர். மனோஜ், எம்.சக்திதரசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சி முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருத்தணி ம.கிரண் நன்றியுரை ஆற்று கிறார்.

இதனைத் தொடர்ந்து 29.01.2026 நாளை வியாழக் கிழமை மாலை 6 மணி அள வில் மப்பேடு கீழச்சேரி பேருந்து நிலைய அருகில் உள்ள பிருந்தாவனம் திரு மண மண்டபத்தில் வர வேற்பு நிகழ்ச்சி நடைபெறு கிறது.

---

### "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டம்! – துறைமுகம் தொகுதியில்

# 284 மாணவியருக்கு மடிக்கணினிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை,ஜன.28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டு தலின்படி, நேற்று (27.01.2026) இந்து சமய அறநிலையத்துறை அமைச் சரும், சென்னைப் பெருந க வளர்ச்சிக் குழுமத் தலை வருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட் பட்ட 'ரீசன்னிகா பரமேஸ் வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயி லும் 284 மாணவியருக்கு, பிரகாசம் சாலையில் உள்ள பாரதி பெண்கள் கலை மற் றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

விலையில்லா மடிக்க ணினி வழங்கும் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.01.2026 அன்று சென்னை, நந்தம் பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "உலகம் உங் கள் கையில்"எனும் மாபெ ரும் திட்டத்தின் மூலம், தக வல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ண றிவு துறையில் உள்ள வாய்ப் புகளை பயன்படுத்தும் வகையில் கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்க ளுக்கு ரூ.2,172 கோடி மதிப் பீட்டில் 10 இலட்சம் மடிக் கணினிகளை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அரசின் இத் தகைய முன்முயற்சிகள் மாணவர்களை உலகளா விய போட்டித் திறன் கொண்ட மனித வளமாக அவர்களை உருவாக்கும் ஒரு வலுவான அடித்தள மாக திகழ்கிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று (27.01.2026) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழு மத் தலைவருமான பி.கே. சேகர்பாபு அவர்கள், "உல கம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 'ரீசன் னிகா பரமேஸ்வரி பெண் கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 284 மாணவியருக்கு வழங்கி னார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணை யாளர் கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம், கல்லூரியின் செயலாளர் கிஷோர்குமார், முதல்வர் முனைவர் வனிதா மற்றும் அலுவலர்கள், கல் லூரி பேராசிரியர்கள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---



அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூர் பேருந்து நிலையத்தில் உள்ள மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி மகள் திராவிடச்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகர், லதாபாலு, மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன்,ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மா.அன்புமகன், கோ.அறிவழகன், தெய்வ.இளையராஜா, என்.கணேசன், பொன்.செல்வம், ஏ.ஜி.எஸ்.அருண், நகர கழக செயலாளர்கள் வெ.கொ. கருணாநிதி, இரா.முருகேசன், கே.சி.லூயிகதிரவன், எஸ்.ஆர். இராமராஜன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.